முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1149

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.11.2022, திங்கட்கிழமை

1. அறமெனும் சக்தியாய் வாழும் அரங்கா
   அன்னதான வள்ளலாய் திகழும் தேசிகா
   வரம்தந்து மக்களை மீட்கும்
   வள்ளலாக வாழும் ஞானியாக உள்ள ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   ஆசிதனை சுபகிருது தேள் திங்கள்
   (சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 05 ம் நாள் 21.11.2022, திங்கட்கிழமை)
   அரங்கனுக்கு இன்னும் ஞான ஆற்றல் கூட உரைப்பேன்
3. வானவர்கள் மெச்சுகின்ற வள்ளல் நீ
   வையகத்தை காக்கின்ற மாதவசி நீ
   தானதருமம் அறிந்து உன் சக்தி வழி
   தரணியோர் பொருளுதவி செய்து கொண்டு
4. செய்து கொண்டு தன்னை சரணாகதியாக
   தக்கபடி ஞான வழி உட்கிடத்தி
   உட்கிடத்தி உன் வழியே தொண்டு செய்ய
   உலகோர்க்கு தானாக வினை நீங்கி
5. மெய்ஞானம் என்கின்ற அரங்கன் உன் சக்தி
   முருகப்பெருமான் என் ஆசியாக அனைவருக்கம் கிட்டும்
   கிட்டவே இந்த வித அற்புதத்தை
   குறைவின்றி எளிமைபட செய்யும் அரங்கன் நீயே
6. உற்றதொரு கலியுகத்தின் சிறந்த ஞானி
   உலகை மீட்கின்ற மாதவசியும் நீ
   தவசியே தர்மனே உந்தனுக்கு
   தண்டாயுதன் யான் பரிபூரணமாய் உடனிருக்க
7. அவனியில் உன்னைக் கண்ட மக்களெல்லாம்
   அகிலத்தில் என்னைக் கண்ட பலனும் வரமும்
   வரமும் பெற்று இனிதே உலகில்
   வல்லமைபட ஞானிகளாக ஆற்றல்பெறுவர்
8. ஆற்றல்கூட்டி அகிலத்தையே மாற்ற
   அற்புதத்தை சூட்சுமமாய் அரங்கன் நீ நடத்தி வர
   வருகின்ற உன் சேவைக்கு
   வல்லமை கூட்டி வடிவேலன் பலமாக இணைந்துள்ளேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–